ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 16.03.2020 |

## இலங்கை மத்திய வங்கியானது, கொரோனா வைரஸ் (கொவிட் - 19) தொற்றுநோய்ப் பரவலுக்கு மத்தியில் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் நாணயக் கொள்கையினை மேலும் இலகுபடுத்துகின்றது

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, 2020 மாச்சு 16ஆம் திகதி அதன் நாணயக் கொள்கை நிலைப்பாடு தொடர்பாக நடைபெற்ற அவசரக்கூட்டத்தில், 2020 மாச்சு 17ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.25 சதவீதத்திற்கும் 7.25 சதவீதத்திற்கும் குறைப்பதற்கும் தற்பொழுதுள்ள ஒதுக்கு பேணப்படுகின்ற காலப்பகுதியில் நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபாய் சார்ந்த வைப்புப் பொறுப்புக்களுக்குமான நியதி ஒதுக்கு விகிதத்தினை 1.00 சதவீதப் புள்ளியினால் 4.00 சதவீதத்திற்கும் குறைப்பதற்கும் தீர்மானித்துள்ளது. உலகளாவிய ரீதியில் வேகமாகப் பரவிவரும் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) தொற்றுநோய் பரவல் மற்றும் அதன் இலங்கை மீதான சாத்தியமான பரவலுடனும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அவசரமாக ஆதரவளிக்கும் தேவைப்பாட்டினைக் கருத்திற்கொண்டு நாணயச் சபையானது இத்தீர்மானத்திற்கு வந்துள்ளது.

இலங்கையில் பொருளாதார வளர்ச்சியானது 2019 இறுதிவரையான விரிவாக்கப்பட்ட காலப்பகுதியினுள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டிருந்ததுடன் சனாதிபதித் தேர்தலின் பின்னரான வியாபார நம்பகத்தன்மையின் மீட்சியினாலும் இறை மற்றும் நாணயக் கொள்கைகளின் உந்துதலின் விளைவினாலும் மீள்திருப்பத்தினை ஆரம்பித்திருந்தது. எவ்வாறாயினும், 2020ஆம் ஆண்டுகாலப்பகுதியில் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கையானது தொற்றுநோய்ப் பரவல்களினால் வெவ்வேறு வழிகளினூடாக தொடர்ந்தும் பாதிப்படையுமென்பதனை அதிகரித்துவருகின்ற சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றது.

இன்றைய தீர்மானத்திற்கு முன்னதாக, இலங்கை மத்திய வங்கியானது, இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில் நன்கு உறுதிநிலைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மற்றும் பணவீக்கம் மீதான கேள்விப்பக்க அழுத்தங்கள் காணப்படாமை என்பவற்றின் அடிப்படையில் உள்நாட்டு

பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சிக்கு ஆதரவளிப்பதற்கு பல்வேறுபட்ட வழிமுறைகளினை எடுத்திருந்தது. இது, 2020 சனவரி 30 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களினை 50 அடிப்படைப் புள்ளிகளினால் குறைத்தமை, செயற்பாட்டிலுள்ள மற்றும் செயற்பாடற்ற இரண்டு வகையிலுமுள்ள கடன் பெறுநர்களுக்காக கொடுகடன் ஆதரவளிப்புத் தொகுதியினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒழுங்குமுறைப்படுத்தியமை மற்றும் 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளைக்கு இசைந்துசெல்லும் விதத்தில் சந்தைக் கடன் வழங்கல் வீதமானது தொடர்ச்சியாக குறைவடைந்து செல்வதனை உறுதிசெய்வதற்கு நிதிச் சந்தையூடான கலந்துரையாடலினை பேணிக்கொண்டிருந்த வேளையிலும் செயற்படா முற்பணங்களின் மீட்சிக்கு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியமை போன்றவற்றை உள்ளடக்குகின்றது. இலங்கை மத்திய வங்கியானது, உருவாகிவருகின்ற சூழ்நிலையிலிருந்து ஏற்படுகின்ற ஏதாகிலும் தாக்கத்தினை எதிர்கொள்வதற்கு நிதிச் சந்தையில் தேவைப்படுமளவிற்கு திரவத்தன்மை ஒதுக்கினையும் உறுதிசெய்கின்றது. இன்றைய தீர்மானமானது மேலே ஏற்கனவே காணப்படுகின்ற நடைமுறைப்படுத்தப்படுகின்ற வழிமுறைகளினை பூர்த்திசெய்யும் விதத்தில் அமைகின்றது.

இலங்கை மத்திய வங்கியானது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழிநடாத்தப்பட்டு அனைத்து நிதியியல் நிறுவனங்களுக்கும் ஆண்டின் இதுவரை காலமும் கொள்கை வட்டி வீதங்களிலான ஒட்டுமொத்த 75 அடிப்படைப் புள்ளிகளின் குறைப்பினாலும் நியதி ஒதுக்கு விகிதத்தின் குறைப்பினூடாக குறைக்கப்பட்ட நிதிக்கான செலவினத்தின் முழுநன்மையினைப் பெறுவதனை உறுதிசெய்வதற்கு எந்தவித காலதாமதமுமின்றி சந்தைக் கொடுகடன் வீதத்தில் பிரதிபலிக்கச் செய்யும் அவசியத்தினை மீண்டும் வலியுறுத்துகின்றது. இதற்கு மேலும், இலங்கை மத்திய வங்கியானது நிதிச் சந்தையின் குழப்பத்திற்கு வழிவகுக்கக்கூடிய ஊக நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து தவிர்த்துக்கொள்ளுமாறு நிதியியல் நிறுவனங்களுக்கு கோரிக்கை விடுக்கின்றது.

இலங்கை மத்திய வங்கியானது, பணம் மற்றும் இலத்திரனியல் பரிமாற்றலினை தூண்டுவதற்கும் தேவைப்படும்பொழுது ஏதேனும் இடையூறுகளைத் தடுப்பதற்கும் அரச மற்றும் மத்திய வங்கியின் பொறுப்புக்களை உரிய நேரகாலத்துடன் தீர்ப்பனவு செய்வதற்குமான தன்மையினை நிச்சயிப்பதற்குமான சிறப்பாகப் பரிசோதிக்கப்பட்ட தொடர்ச்சியான வியாபார ஏற்பாடுகளைச் செயற்பாட்டில் வைத்திருக்கிறது.

இலங்கை மத்திய வங்கியானது, கொரோனா வைரஸ் (கொவிட் - 19) தொற்றுநோய்ப் பரவுதலின் பொருளாதாரத் தாக்கத்தினைக் குறைப்பதற்கு ஒன்றிணைந்த இறை மற்றும் நாணயக் கொள்கைப் பதிலிறுப்புக்களை உறுதிசெய்து கொள்வதற்கு அரசாங்கத்துடன் நெருக்கமாகப் பணியாற்றி வருகின்றது. குறிப்பாக, இலங்கை மத்திய வங்கியானது தற்போதைய விதிவிலக்கான சூழ்நிலையினைக் கையாள்வதற்கு அரசாங்கத்திற்குத் தேவையான நிதியினை சீராகப் பெற்றுக்கொடுப்பதற்கும் அரசாங்கத்துடன் பணிபுரியும்.

இலங்கை மத்திய வங்கியானது, உலகளாவிய மற்றும் உள்நாட்டு சந்தை அபிவிருத்திகளை மிக அவதானமாகக் கண்காணிப்பதோடு, தேவைப்படுமிடத்து மேலதிக கொள்கை, ஒழுங்குமுறை மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை எடுக்கும் வேளையில், நிதியியல் சந்தையில் சீரான செயற்பாட்டினை உறுதிசெய்வதற்கு ஒவ்வொரு நிதியியல் நிறுவனங்களின் நடவடிக்கைகளினை கண்காணிப்பதுடன் மற்றும் பொருளாதாரத்திற்கு இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கையின் பரிமாற்றலூடாக அவசர ஆதரவளிப்பு தேவைப்படுகின்றவர்களுக்கு உரிய நேரகாலத்துடனான உதவி கிடைக்கப்பெறுவதினை உறுதிசெய்வதனையும் கண்காணிக்கின்றது.